செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அக] யாழ்ப்பாணம்:- சௌமிய ஞு தை மீ 10 உ வெள்ளிக்கிழமை (23-1-1970) [இலக்கம்-சுக

# பாண்டிமழவர் ஞானப்பிரகாசர் பரம்பரையைச்சேர்ந்தவர் நாவலர் பெருமான்

— பண்டிதமணி அவர்கள்

"இற்றைக்கு ஆயிரம் வருடங்களுக்கு முன் திருநெல்வேலியில் வாழ்ந்தவர் பாண்டிமழவர். நல்லூரை இராசதானியாக்கி அரசாட்சி தொடங்கிய சூரியச் சக்கரவர்த்தியைச் சோழநாட்டிலிருந்து அழைத்து வந்தவர் பாண்டிமழவரே. ஆரியச் சக்கரவர்த்தியுடன் பாண்டிமழவரால் அழைத்து வரப்பட்ட கங்காதரக் குருக்கள் என்னும் புவனேகவாகுவே ஆரியச் சக்கரவர்த்தியின் மந்திரியாய் இருந்து பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோவிலையும் கட்டினார்.

நமது நாட்டைப் பறங்கியர் அரசாண்டபோது திருநெல்வேலியில் வாழ்ந்தவர் ஞானப்பிரகாசர் அறுபத்து நாலாயிரம் சைவர்களைக் கத்தோலிக்கராக்கிய ஒலிவேருவின் ஆட்சி அப்போது நடந்தது. சைவர்களாக இருந்து கத்தோலிக்கர்களாக மாறிய அறுபத்து நாலாயிரம் பேர்களில் நூற்றைம்பது பேர் பிராமணக் குருமார். இருபதுபேர் இராச குடும்பத்தவர். இவர்கள் ஒலிவேருவின் உத்தியோகப் பேச்சில் எடுபட்டுக் கிறிஸ்தவர்களானார்கள். மனிதர்களையெல்லாம் விசேடமாகச் சைவர்களையெல்லாம் இரண்டு கால் மாடாக நடத்திய ஒலிவேரு அந்தப் பறங்கிக்கு ஒவ்வொரு குடியில் உள்ளவரும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நால்கால் மாட்டை - பசு மாட்டை - உணவுக்குக் கொடுக்க வேண்டும் என்ற கட்டளை இருந்தது. திருநெல்வேலி ஞானப்பிரகாசருக்கும் பசு மாடு கொடுக்வேண்டிய முறைவந்தது. ஒரு நாளைக்கு ஒரு பசுமாடு தின்னும் அந்தப் பறங்கிக்கு பசுமாடொன்றை உணவுக்குக் கொடுக்கவிருப்பமில்லாத ஞானப்பிரகாசர் இந்த நாட்டையே விட்டுப் போய் இப்பொழுது குன்றக்குடி என வழங்கப்படும் திருவண்ணாமலை ஆதீனத்திற் சேர்ந்து சந்நியாசியானார்.

ஆரியச் சக்கரவர்த்திகளின் அரசாட்சி நல்லூரிலே ஏற்படுவதற்குச் காரணமாய் இருந்த திருநெல்வேலி பாண்டிமழவரினதும் பசுக்கொலைக்கு அஞ்சிய திருநெல்வேலி ஞானப்பிரகாசரினதும் பரம்பரையைச் சேர்ந்தவரும் நாமெல்லாம் உய்ய வந்த யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான ஆவர்.

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற நாவலர் குருபூசை விழாவில் பேசிய பண்டிதமணி சி கணபதிபிள்ளை அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்கள். விழாவுக்குப் பெருந்தொகையான மக்கள் சமூகமளித்திருந்தார்கள்.

வடபிராந்திய சமூகசேவைப் பகுதி அதிகாரி திரு சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்ற நாவலர் விழா

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
பன்னெடுங்காலம் பணிசெய்து பழையோர்
தாம்பலர் ஏம்பலித் திருக்க என்னெடுங் கோயில்
நெஞ்சுவீற் றிருந்த எளிமையை என்றும்நான் மறக்கேன்
மின்னெடும் புருவத் திளமயி லனையார்
விலங்கல்செய் நாடகசாலை யின்னடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே.
திருச்சிற்றம்பலம்
-திருநாவுக்கரசுசுவாமிகள்.

## நாவலர் நல்வாக்கு

நீ உன் உடம்பை வளர்த்தற்குப் பிறிதோன்றன உடம்பை உண்பையாயின், எவ்வகையால் அருளை ஆளுவை?

## நல்லை. ஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஸ்ரீ தியாகப் பிரம்ம மஹோற்சவம்

தைத்திங்கள் 12, 13, 14, 15-ஆம் திகதிகளில் (ஜனவரி 25, 26, 27, 28-1-70 ஆகிய நான்கு தினங்களிலும்) நல்லை மதுரைத் திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் தினமும் மாலை 5-15 முதல் 10-30 வரை (27-1-70 காலை 5-30 தொடக்கம் 11½ மணிவரையும கூட உண்டு) சிறப்புற நடைபெறவிருக்கிற து தினமும பிரபல இசை வித்வான்களும், நாதஸ்வர தவில் வித்துவான்களும் இசை விருந்தளிக்கவிருக்கின்றர்கள். 25ந் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7-15 தொடக்கம் 8-1 வரை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத தம்பிரான்சுவாமிகளால் கதா காலக்ஷேபம் நிகழ்த்தப்பெறும். அதையடுத்து சங்கீத கலாநிதி உயர்திரு சித்தூர் சுப்பிரமணியபிள்ளை இன்னிசைவிருந்தளிப்பார். இவ்விழாவில் சங்கீத பூஷணங்கள் திரு S பாலசிங்கம், திரு V சண்முகரத்தினம், திரு S. பரம தில்லைராஜா, திரு. பொன் சுந்தரலிங்கம் ஆகியவர்களும் இன்னும் பலரும் இசைவிருந்தளிப்பர், 28-ஆந் தேதி இரவு 8 மணி 10 மணி வரை அலங்காரப் புஷ்பப் பல்லக்கில் ஸ்ரீமத் தியாகராஜ சுவாமிகள் திரு உலா வரும் நிகழ்ச்சி இடம்பெறும். இவ் ஊர்வலம் நிகழும் வீதிகள்:-

ஆதீனத்திலிருந்து ஆரம்பமாகி கோயில்வீதி, நாவலர் வீதி, வைமன்வீதி, பருத்தித்துறைவீதி வழியாக ஆதீனம் சேர்தல் அன்றுபிரபல வயலின மிருதங்க வித்வான்கள் பலரது வாத்திய இசை நிகழ்ச்சி இனிது நிகழவிருக்கின்றது.

(நாயன்மார்கட்டு நிருபர்)

## மகாவலி கங்கை

மகாவலி கங்கையைத் திசை திருப்பும் வேலைக்கு உலகவங்கி 17 கோடியே 20 இலட்சம் ருபா வழங்கியுள்ளது காணி நீர்ப்பாசன அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு ம. ஸ்ரீகாந்தா அவர்கள் இத்திட்டம்சம்பந்தமான கூட்டத்தில் இச்செய்தியை வெளியிட்டார்

## எகலியகொடை முருகன் திருவுருவப் பவனி

அவிசாவளைப் பகுதியைச் சேர்ந்த எகலிய கொடையில் எகலிய கொடை இந்து வளர்ச்சிக் கழகத்தினர் குன்றுதோறாடும் குமரப்பெருமானுக்குத் திருக்கோயில் அமைத்து 28-1-70 -இல் கும்பாபிஷேக விழாச் செய்கின்றனர்.

அவ்வாலயத்திற்குரிய முருகப் பெருமான் திருவுருவச் சிலை ஊர்வலம் கிரிமலையிலிருந்து புறப்பட்டது. காஞ்சி மெய்கண்டாராதீனக் குருமகாசந்நிதானம் ஊர்வலத்தைத் தொடக்கி வைத்தார்கள் பிரதான கல்லூரிகள் பிரமுகர்கள் ஊர்வல நிகழ்ச்சியில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

கும்பாபிஷேக சிறப்பிதழ் ஒன்றும் வெளியிடப்பெறறது. கும்பாபிஷேகத்தன்று, மூதவைத் தலைவர் கௌரவ, A இரத்தினநாயக்கா. ஸ்ரீலஸ்ரீ நாவலர் சபைச் செயலாளர் திரு. ம. ஸ்ரீகாந்தா, கிரில்லத்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு பி. வீ விஜயசுந்தரா முதலியோர் பங்குபற்றுகின்றனர். (ந நி)

## அருணந்தி சிவாசாரியார்

— சைவப்புலவர் திரு. வ சுப்பிரமணியம் புலோலி, —

சித்தியார் - வழிநூல்

பரபக்கம்

உலகாயதன், சௌத்திராந்திகன், யோகாசாரன், மாத்தியமிகன், வைபாடிகன், நிகண்டவாதி, ஆசீவகன், பட்டாசாரியன், பிரபாகரன் சத்தப்பிரமவாதி, மாயாவாதி பாற்கரியன், கிரீச்சுரசாங்கியன், பாஞ்சராத்திரி என்ற புறச் சமயத்தவருடைய கொள்கைகளை முதலிற்கூறி, அப்புறச்சமயங்களைச் சித்தாந்தத்தால் மறுப்பது பரபக்கம்.

சித்தியாரில் மாத்திரம் அளவை (Logic) கூறப்பட்டிருக்கிறது. சித்தியாரின் சுபக்கததில் அளவை கூறிப்

பரபக்கம் - சுபக்கம்

பின், கடவுள், உயர், கட்டு, இவற்றின் உண்மை, இவற்றின் பொது இயல்பு, சிறப்பியல்பு, கட்டினின்றும்விடுபட்டுக் கடவுளை அடையவேண்டிய வழிகள், கடவுளையடைந்தோர் தன்மை முதலியன கூறப்பட்டுள்ளன. சமயத் துறையில் மட்டுமன்றி இலக்கியத்துறையிலும் சித்

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

மில்க் வைற் நீல சோப்




50 மேலுறைகளை அனுப்பி ஒரு 1970-ஆம் ஆண்டு கலண்டரைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்சோப்தொழிற்சாலை யாழ்ப்பாணம்.

## திருக்கோபுர அத்திவாரம்

திருவருளின் துணையினல் அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில் திருக்கோபுர அத்திவாரம் இடுந் திருநாள் தைமூ 15-ம்திகதி (28—1—70) எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது அன்று அதிகாலை 4-30 மணி தொடக்கம் விசேட ஆராதனை நிகழும் அதையடுத்து 5 மணி தொடக்கம் 7-30 மணி வரையும் நிகழவிருக்கும் சுப வேளையில் சிவ அன்பர்கள் ஒருங்கு சேர்ந்து அத்திவாரம் இடுவதற்குத் திருவருள் கைகூடியுள்ளது. இத்திருப்பணிக்குபொருளுதவிபுரியவிரும்புவோர், திரு சி. பொன்னம்பலம் செயலாளரும், பொருளாளரும் திருக்கோபுரச் செயற் குழு, அரியாலை என்னும் விலாசத்திற்கு நேர்முகமாகவோ அல்லது மணியோடர் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம் (ந. நி.)

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சௌமிய ஹு தை மீ ௧0-௨ வெள்ளிக்கிழமை [1970

## தைப் பூசம்

பூதஐந்தும் இடைகலை பிங்கலை சுழுமுனை யென்னும் நாடிகள் மூன்றும் சோம சூரியாக்கினிகளென்னும் மூன்று மண்டலங்களும் பொருந்திய சம்பந்தத்தினாலே பிண்டமும் அண்டமாகும. (பிண்டம் - சரீரம். அண்டம் - பிரமாண்டமாகிய உலகம்). பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன்' சதாசிவனெனப்பட்ட பஞ்ச கர்த்தாக்களையும் இரண்டிலும் காணலாம். சரீரத்திலே இடைநாடி இடத்திலும், பிங்கலை நாடி வலத்திலும் சுழுமுனை நாடி நடுவிலும் போதல்போல இப் பூமியில் இடை நாடி இலங்கைக்கு நேரே போகும். பிங்கலை நாடி இமயமலைக்கு நேரே போகும். சுழுமுனை நாடி அவ்விரண்டிற்கும் நடு நாடியாகிய தில்லை வனத்திற்கு நேரே போய்க்கூடும். அதுவே சிதம்பரம். சிதம்பரம்—ஞானாகாசம். அத்தில்லையில் நடராசப்பெருமான் சிவகாமியம்பாள் காணப் பஞ்ச கிருத்திய நடனம் செய்வார்.

தோற்றந் துடியதனிற் றேயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்கார — மூற்றமா
யூன்மு மலர்பதத்தே யுற்ற திரோத முத்தி
நான்ற மலர்ப் பதத்தே நாடு.

சிருட்டி ஆன்மாக்களுக்கு தனுகரண புவன போகங்களை முதற்காரணத்தினின்றும் தோற்றுவித்தல். திதி தோற்றுவிக்கப்பட்ட தனுகரண புவன போகங்களை நிறுத்துதல். சங்காரம் அவற்றை முதற்காரணத்தில் ஒடுக்குதல். திரோபவம் ஆன்மாவை இருவினைப்பயன்களாகிய போக்கியப் பொருள்களில் அமிழ்த்துதல், அநுக்கிரகம் ஆன்மாவுக்கு பாசத்தை நீக்கிச் சிவத்துவத்தை விளக்குதல். இந்த நடனத்தை நடராசப்பெருமான் சிதம்பரத்தில் புரிவார். எண்ணிலலாத புண்ணியங்களைச் செய்த ஆன்மா திருவருளினல் ஞானநாட்டத்தைப்பெற்று சிதம்பர நடனத்தைத் தரிசிக்கும அவ்வான்மாவுக்குப் பிறப்பில்லை. காணப்பெருத ஆன்மாவுக்கு பிறப்புண்டு.

குறித்த தில்லைவனத்தில், தை மாதத்தில் பூச நட்சத்திரமும் வியாழககிழமையும் கூடிய சித்தியோக தினம் மத்தியான வேளையில் வியாக்கிரபாத முனிவர் பதஞ்சலி முனிவர், பிரம விஷ்ணு முதலிய தேவர்கள் தில்லைமூவாயிரவர் ஆகியவர்கள் ஒரு காலத்தில் திருவருளினல ஞானநாட்டததைப்பெறறு நடராஜப் பெருமானின் ஆனந்தத் தாண்டவததைத் தரிசத்தார்கள். பின்பு அந்த இடத்தில் அவர்கள் ஞான சபையாகிய கனகசபையை அமைத்தார்கள்.

இச்சிறந்த வைபவத்தை மக்கள் நினைவு கூர்ந்து நடராஜப்பெருமானை வழிபட்டு ஈடேறும் பொருட்டே தைப்பூச விழா எடுக்கப்படும். இவ்விழாவின் பெருமையினைக் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் என்பைப்பெண்ணுருவாககுதற்குப் பாடிய பதிகத்தில காட்டியிருககின்றனர்.

மைப்பூசு மொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்ருன் கபாலீச் சரமமர்ந்தான்
நெய்ப்பூசு மொண்புழுக்க னேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணுதே போதியோ பூம்பாவாய்.

இவ் விழா சைவத்தின் உயிர் நாடியாகிய தத்துவத்தை விளக்குகின்றது. இத்தினத்தில் மக்கள் ஆசார சீலராய் நடராசப் பெருமானை வழிபட்டு இஷ்ட சித்திகளைப் பெறுதல் கைகூடும்.

# சைவசித்தாந்தமும் ஷண்மதமும்

[இக் கட்டுரை காஞ்சிபுரம், மெய்கண்டாராதீன மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச பரமாசாரிய சுவாமிகளால் நமக்கு நேரே கூறப்பெற்றதாகும்.]

யாதொரு தெய்வங் கொண்டீர்,

சைவத்துள் பரசிவமே சமயாதீதப் பழம் பொருள். அதுவே ஒழிவற நிறைந்து அசைவற நிற்கும் பரமாகாசமாக விருப்பது. அதனினும் பெரியதாக வேறொன்றிருக்க இடமில்லை. எங்கும் நிறைந்ததைக் காட்டினும மற்றொன்று எப்படி யிருக்கமுடியும்? இருந்தால் எங்கும நிறைந்ததாகவும் அசைவற்றதாகவும ஒன்றையும் சொல்லல் இயலாது. சைவத்துள் உயிரும் சிவமும் ஆகாசமாகவே கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாருய உண்மையாற்ருன் அத்துவிதம் சித்திக்கின்றது. பர சிவம் என்பதும், பரப்பிரமம், பரமாகாசமெனபதும, இரவு பகலில்லா இன்ப வெளி யென்பதும் வேறல்ல.

சிதாகாசம் என்பது அருள் வெளியைக் குறிப்பது. அதைத் தனக்கு உருவாகக் கொண்டு நீக்கமற நிறைகின்ற பரிபூரணனந்தம் எனப்படுவதே முற கூறிய பரப்பிரமம். அதை உணர்த்தி அதனை அடைவிப்பதே நம் சித்தாந்த சைவம். ஏனைய சமயங்கள்போலாது எல்லாச் சமயங்களும் தம்பாலடங்கத் தான் பிறிதொரு சமயத்தில் அடங்காது அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்து மோன வெளியாய் என்றும்உள்ளதே சித்தாந்த சைவம். காலபரிச்சேதம், தேச பரிச்சேதம், வசுபரிச் சேதம் என்னும் இம மூன்றும் இல்லாதது. சித்தாந்த சைவப பொருள் என்றும் இருப்பதால் காலப் பரிச்சேதம இல்லாதது. எங்கும் இருப்பதால் தேச பரிச்சேதம் இல்லாதது. எல்லாமாயிருப்பதால் வசு பரிச்சேதமும் இல்லாதது பரிச்சேதம் — வரையறை. எல்லாம் சிவனென நின்ருய் போற்றி - எல்லா உலகமும் ஆனுய் போற்றி, நித்தியன் நிததியானந்தன், எல்லாமாய் அல்லதுமாயிருந்தது; அசலன், ஒழிவற நிறையோகம், என்பனவற்றல் இறைவன் எங்குமுளன் என்ற உண்மை புலப்படும். நித்தியன் என்பதே என்றும் உள்ளவன் என்பதைக் காட்டும்.

இப்பொருளே எல்லாப் பொருளுமாய் அவரவர் வினைக்கீடாக ஏகதேசமாகி வழிபட நிற்பது, ஆதலால் மதபேதத்தாரால் தந்தெய்வம் என் தெய்வம் என்று வழக்கிடுவதனுல், அறிவிற் பெருகியவராயும், பொதுமைநோக்குடையவராயும் சிறப்பு நோக்குமுடையவராயும் உள்ள சிவஞானிகளால்,

யாதொரு தெய்வங் கொண்டீ
ரத்தெய்வ மாகியாங்கே
மாதொரு பாக னார்தாம்
வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படுமி றக்கும்
பிறக்குமேல் வினையுஞ்
செய்யு
மாதலா னிவையி லாதா
னறிந்தருள் செய்
வனன்றே.

என உண்மையை உபதேசிக்கப் பெறுவர்.

திருநாவுக்கரசு சுவாமிகள்:

"அருந்துணையை அடியார் தம் அல்லல் தீர்க்கும் அருமருந்தை" என்னும் திருத்தாண்டகத்தில், பொது நீக்கித்தனை நினையவல்லோர்க்கு என்றும் பெருந்துணை என்று திருவடியின் பொருளை இங்கு உணர்த்தல் ஷண்மதங்களும் சிவசமயத்துள் ஒவ்வொரு பகுதியில் ஏகதேசமாயடங்கும. அவற்றுள் சைவசித்தாந்தம் ஷண்மத சித்தாந்தமாக முற்றும்மாருமல் ஒவ்வோர் அம்சமாக நின்று அவரவர் வினைக்கும் அறிவிக்கும் தக்கபடி கொண்டொழுக முடியும்.

## சைவபரிபாலன சபை நடாத்திய
# பரீட்சை முடிவுகள்

### சைவப்புலவர் தேர்வு: இரண்டாம் பிரிவு

1. திரு அ. கி. ஏரம்பமூர்த்தி, சங்கீதபூஷணம், சு. இல 121 (பளை மகாவித்தியாலயம்) மீசாலை தெற்கு, சாவகச்சேரி

மூன்ரும் பிரிவு: 2 திரு. நா. க. தங்கரத்தினம் (எழுத்தாளர் 'நதுல')ன் சு இல: 123, வத்தளை றேமன் கத்தோலிக்க பாடசாலை, வத்தளை

ஞானசித்தி (சாத்திரம் I)

1 திரு. க தணிகாசலம் சு இல: 122, "தாயகம்" சந்தை வீதி, உடுப்பிட்டி.

### இளஞ்சைவப்புலவர் தேர்வு: இரண்டாம் பிரிவு

1. திரு சு பாலச்சந்திரமூர்த்தி, சு. இல: 131, மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பளை. 2. செல்வி க. கமலாஜனி சு. இல: 132, மே/பா. வித்துவான் பொன். கனகசபை புங்குடுதீவு,

மூன்ரும் பிரிவு: 3. செல்வி கலைச்செல்வி கனகசபை சு இல: 133 "தமிழகம்" 3-ம வட்டாரம். புங்குடுதீவு. 4. செல்வி மீனலோஜனி இராசரத்தினம் சு. இல: 128 11. அரசடி லேன். கே. கே எஸ் வீதி, யாழ்ப்பாணம், 5 செல்வி. செல்லம்மா சின்னப்பு சு. இல: 126, மீசாலை தெற்கு, மீசாலை

ஞான சித்தி (சாத்திரம் I)

1. திரு, க. தர்மராசா சு இல: 130, அ. க. தமிழ்ப் பாடசாலை, மாங்குளம், 2. திரு து. வி. மகாலிங்கம், சு. இல: 127, பத்திரிகை நிருபர், மீசாலை, சாவகச்சேரி

### சித்தாந்த பாலபண்டித தேர்வு: 2ஆம் பிரிவு

1. திருமதி மனேன்மணி நாகநாதன், ஆசிரியை சு இ 138, மகாவத்தை அரசினர் பாடசாலை, கொழும்பு.

மூன்ரும் பிரிவு: 2. செல்வி மாலோகமணி தம்பையா, சு. இல: 135, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. 3. திரு. துரை. தனபாலஷண்முகன், சு. இ. 136; 272/3, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

ஞான சித்தி (இலக்கணம்)

1. இரா. ஸ்ரீதரன், சு. இல: 137, 581/1, நாச்சிமார் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

20-1-70 இல் பரீட்சைக்குழுவினரால் பரிசீலனை செய்யப்பட்டது.

ஆ. தனபாலசிங்கம் காரியதரிசி, க. கணபதிப்பிள்ளை பரீட்சைக் காரியதரிசி
சைவபரிபாலன சபை

### பாண்டி மழவர்........

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

வில் பண்டிதமணி தொடர்ந்து மேலும் பேசுகையில்,

"நாவலர் பெருமான் சிறுவர்கள்தொடங்கி பெரியோர்கள் வரை படித்துணரக் கூடிய முதலாம் பாலபாடம், இரண்டாம பாலபாடம், சைவ வினுவிடை முதலிய அரிய நூல்களைத் தந்துள்ளார். இரண்டாம் பாலபாடத்தில் உள்ள முதலாம் வசனம் யாவரும் மனப்பாடம் செய்யப்பட வேண்டிய வசனம் ஆகும். பிள்ளைகளாகிய நீங்கள் இரண்டாம் வகுப்பிலே அந்த வசனத்தைப் பாடமாக்கிவிட வேண்டும். அந்த வசனம "நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம்பெறும் பொருட்டேயாம்" என்பதாகும். இந்த அருமருந்தன்ன உயிர்வாக்கியத்தையோ, இந்தத் தேவ அமிர்த வாக்கியத்தைச் செய்தருளிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானையோ ஒருபோதும் மறக்கக் கூடாது" என்று குறிப்பிட்டார்கள்.

நியாயவாதி திரு. சி. பொன்னையா, பண்டிதை ச. அமிர்தாம்பிகை உட்பட பலர் நாவலர் பெருமானின் தொண்டுகள் குறித்து உரையாற்றினர்கள். உரைவிழாவையடுத்துக் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

(நமது நிருபர்)

## கேகாலை கதிர்வேலாயுத சுவாமி கோயில்

# தைப்பூச விழா

கேகாலை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் தைப்பூசத் திருவிழா தைத்திங்கள் 9-ஆம் நாள் ஆகிய (22-1-70) நேற்று வெகு சிறப்பாகவும் பக்தி சிரத்தையுடனும் நிகழ்ந்தது. விசேட உள்வீதி சுவாமிஎழுந்தருளும்திருவிழா முதல் நாளும் நிகழ்ந்தது. தைப் பூசத்திலன்று மாலையில் 'அன்புக்கடல்' திருப்பூந்துடி வி. க. ஆறுமுகம் அவர்களால் "ஸ்ரீ வள்ளி" என்னும் சங்கீத கதாப் பிரசங்கமும், கொழும்பு கணபதி வித்தியாலய அதிபர் திரு. க. சி சண்முகம் அவர்களால் "அவன் திருவிளையாடல்" என்னும் பொருளில் விரிவுரையும், இன்னிசைக் கச்சேரி, பசனை ஆகியனவும் இடம்பெற்றன. நேற்று மாலை 7 மணிக்கு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி வள்ளி தெய்வயானை சமேதராகி, காளை பூட்டிய அலங்கார இரதத்தில் புறப்பட்டு திருவீதி வலம் வந்த போது ஏராளமான அடியவர்கள் கலந்து அருள் பெற்றனர்.

(நமது கேகாலை நிருபர்)

## தில்லை ஸ்ரீ நடராஜப் பெருமான் சந்நிதி...

(4- ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

விளக்கை 'செய்து வைத்து தினமும மாலையில் பட்டணம் ஒரு படி தீப எண்ணெய்விட்டு தீபங்கள் போட்டுக்கொண்டு வருகின்றனர், மேற்படி திருவிளக்கை ரூபாய் 12 ஆயிரம் செலவில் 29 முகங்களுடன் எவர் சில்வரில் 6 அடி உயரம் செய்து கொண்டு, கார்த்திகைத் திங்கள் 29ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மதுரையில் பிரபல வணிகரும், தில்லையில் திருவிளக்கு தீபம் முதலான அறங்களை கண்காணிப்புடன் நடத்திக்கொண்டு வருபவருமான திருவாளர் பூ. பெ. பெ. சிதம்பர நாடார் அவர்கள் 200க்கு மேற்பட்ட உறவின் முறை நாடார் (ஆண்-பெண்)களுடன் தில்லையம்பதிக்கு வந்து அவர்களுடைய விடுதியிலிருந்து "சிங்கார செடி திருவிளக்கை" அலங்கரித்து நான்கு வீதியும் ஊர்வலமாகக் கொண்டு வந்து, ஸ்ரீமந். நடராஜப்பெருமான் சந்நிதியில் சிங்கார செடி திருவிளக்குக்கு தீபங்களிட்டு வழிபாடுகள் செய்துகொண்டு தீக்ஷிதர்கள் எல்லோருக்கும் கௌரவம் வழங்கினார்கள்.

x x x

## 1 இலட்சரூபாயில் திருவீதி அமைப்பு

### அச்சக அதிபரவர்களின் அரிய சிவப்பணி

தில்லை ஸ்ரீ நடராஜப் பெருமான் கோவிலில் பல ஆண்டுகளாக எவருமே திருப்பணிசெய்யாமலிருந்து வந்த 3 ஆவது பிரகாரத்திலுள்ள கரடு முரடாக கிடந்த பாதையை தஞ்சாவூரிலுள்ள "வெற்றிவேல்பிரஸ்" என்ற அச்சகம் நடாத்தி வரும் தொழில் அதிபரான திரு. பக்கிரிசாமிப்பிள்ளை என்பவர் திருத்தியமைப்பிக்க முன் வந்துள்ளார். இவரிடம் இத்திருப்பணியை நடத்தும்படி திருவருள் தோன்றும்படி செய்யவே, திரு. பிள்ளை அவர்கள் சில ஆண்டாக 3 ஆவது பிரகாரத்தில் சுமார் 1 இலட்சம் ரூபா வரை சொந்தவருவாயில் செலவு செய்து நல்ல முறையில் பாதைகளில் தளவரிசைகள் அமைத்துள்ளார். மேலும் வடக்குக் கோபுர வாசல் பகுதியிலும் பாதைகளில் தளவரிசை செய்யவும் முடிவுசெய்து வாரம் ஒருமுறைவந்து திருப்பணிகளைப் பார்வையிட்டுச்செல்கின்றார். இச்சிலர் கடந்த 3 ஆண்டுகளாக மாலை நேரத்தில் தெற்குக் கோபுரவாசலில் இலவசமாக மாணவ மாணவியர்க்குத் தேவார வகுப்பையும் நடத்திவருகிறார்கள்.

(எமது சிதம்பரம் நிருபர்)

திரு. மா பாலசுப்பிரமணியன்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

உருக்பிராய் 1. தம்பு இராசலிங்கமும் மனைவி
2. சற்குணமணி - வழக்காளிகள்
இல: M, B. 6261 எதிராக
அன்றுங்கை, கோண்டாவில் 1, கணபதிப்பிள்ளை பொன்னுத்துரையும மனைவி 2. இராசம்மா —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 6261ம் இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுள் விபரிக்கப்படும நாலு (4) துண்டுக்காணியை 1970-ம் ஆண்டு மாசி மீ 23-ந் திகதி (23-2-70) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 666-83 சதம் 17-12-63 தொடக்கம் 6-11-64 வரைக்கும ரூபா 400/- வருடமொன்றுக்கு 11% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் மதிப்பிட்ட தொகை ரூபா 203-64 சதம் ஏற்பட்ட செலவு ரூபா 146-54 சதம் வெளியாத்துச் செலவு ரூபா 29-50 சதம் இனிமேல் ஏற்படும் செலவு ரூபா 27-60 சதம்

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாண டிவிசன் நல்லூர் கோவிற்பற்று கோண்டாவில் இறை "படுகாடு" பரப்பு நில. இலாச்சம், 5½ எல்லை கிழக்கு: ஆறுமுகம் பொன்னையாவுடையதும் பங்காளர்களுடைய ஆதனம். வடக்கு: செல்லையாவின் பெண் பொன்னுவின் ஆதனம் பங்காளர்களுடையதும் மேற்கு: வேலாயுதர் பொன்னையாவினுடையதும் பங்காளர்களுடையதும் ஆதனம், தெற்கு: ஆறுமுகம் கப்பாக்குட்டியினுடையதும் ஆதனம் பங்காளரினுடையதும் சொரியலாக 1/20 பங்கும். அதைச் சேர்ந்தவைகளும்.

2. மேற்படி கோண்டாவில் இறை "கொட்டைக்காடு" பரப்பு நில. இலாச்சம் முப்பத்தாறு (36) எல்லை கிழக்கு: நாகநாதர் முருகேசுவினுடையதும் பங்காளர்களுடையதும் ஆதனம், வடக்கு: வேலாயுதர் செல்லத்துரையினுடையதும் ஆதனங்களும் பங்காளர்களுடையதும் ஆதனம்; மேற்கு: வைரவி; நாகமுத்துவினுடையதும பங்காளர்களுடையதும் ஆதனமும் தெற்கு: ஒழுங்கை. இந்த முழு ஆதனத்தில் சொரியலாக பதினாறில் ஒரு பங்கு (1/16)

3. மேற்படி கோண்டாவில் இறை "சேறு கற்புளம்" 32 நிலப்பரப்பும செய்பயிர் வான்பயிர்களும் கிணறும் எல்லை கிழக்கும் வடக்கும் பொன்னையா பெண் பொன்னுச்சியினுடையதும் பங்காளர்களினுடையதும் ஆதனம், மேற்கு: மயிலுவேலுவினுடையதும் பங்காளர்களினுடையதும ஆதனம், தெற்கு ஒழுங்கை இது முழுவதிலும் சொரியலாக பரப்பு நில இலாச்சம ஒன்று குளி ஆகும்.

4. மேற்படி கோண்டாவில் இறை 'ஓடை" பரப்பு நில. இலாச்சம். ஆறே முக்கால் (6¾) பனைகளும் எல்லை கிழக்கு: செல்லத்துரை மனைவி தங்கம்மாவினுடையதும், பங்காளர்களினுடையதும் ஆதனம்: வடக்கு: அரியகுட்டி மனைவி பாக்கியத்தின் ஆதனம், மேற்கு: குழந்தைவேலு மனைவி சின்னப்பிள்ளையின் ஆதனம், தெற்கு: மயிலு வேலுவினுடையதும் பங்காளரினுடையதும் ஆதனம், இதில சொரியலாக எட்டில் ஒன்று (1/8) பங்கு

சி. செ. பாலசிங்கம்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை. 16-1-70
[எம். 380 23—1—70]

## Commission Sale
## கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழ. இல: 9759

1. குழந்தைவேலு சுப்பிரமணியமும்
2. பெண் தங்கமுத்து இருவரும்
புலோலி தெற்கு. பருத்தித்துறை
எதிராக —வழக்காளிகள்
1. தினகரநாதர் இராஜேஸ்வரனும்
2 பெண் செகலம்மா இருவரும்
புலோலி கிழக்கு, பருத்தித்துறை தற்போது வயிரவர் கோவில், வில்சன் ரோட், கிளிநொச்சி —எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கு கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1970ம் ஆண்டு மாசி மாதம் 12-ம் திகதி (12-2-70) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறைக் கோவிற்பற்று புலோலி கிழக்கு சிங்கபாகுதேவன் குறிச்சியிறை வெள்ளுருவை, நின்றத்தாய் நிலப்பரப்பு 9½ ஷ நீளப்பரப்பு 6½ ஷ மட நிறைத்தாய் நிலப்பரப்பு 6¾ ஷ நிலப்பரப்பு 4¾ தாண்டவர்கோணன் குடியிருப்பு வீடு ½ இப்பிரிவுகளில் 1/8 முதலாம் பிரிவில் எட்டில் மூன்று (3/8) பங்கும், 2ம் பிரிவில் அறுபத்து நாலில் பதினொன்பது பங்கும் சேர்ந்த காணிக்கு நிலப்பரப்பு 4 குளி 12, 16/18 இதில் உலாந்தா மேஸ்தர் தா. சுப்பிரமணியத்தால் 1941ம் ஆண்டு புரட்டாதி மாதம் 16ம் திகதி 613-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 152/P. இலக்க வழக்க வழக்கில் வணைக்கப்பட்டிருக்கும் படத்தில 1ம், 2ம், நம்பர் துண்டுகளுக்கு நிலப்பரப்பு 7 குளி 15. 3/4 இதில் வடமேற்குப் புறமாக நிலப்பரப்பு 3 குளி 13, எல்லை கிழக்கும் தெற்கும் வாரித்தம்பி பெண் பாக்கியத்துக்குடைய ஆதனம், வடக்கு பரமநாதன் பெண் கனகம்மாவுக்குரிய ஆதனம், மேற்கு: ஒழுங்கை, இவ்வெல்லைக்குட்பட்டவைகள் முழுவதும் இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 5583-00

| | | |
|---|---|---|
| தீர்வைத் தொகை: 28-1-68 | | 2448-30 |
| 2448-30க்கு 5% வட்டி 28-2-68 தொடக்கம் | 12-1-69 வரை | 107-00 |
| 12.1.1969 வரவேண்டியது | | 2555-00 |
| கொடுபட்டது 12-1-69 | | 250-00 |
| கொடுபடவேண்டியது 12-1-69 | | 2305-30 |
| 2305-30க்கு 5%வட்டி 12-1-69 தொடக்கம் | 4-12-69 வரை | 94-27 |
| 4-12-69 வரவேண்டியது | | 2399-57 |
| கொடுபட்டது 4-12-69 | | 750-00 |
| இறுக்கவேண்டியது 4-12-69 | | 1649-57 |
| 1399-57க்கு வட்டி 4-12-69தொடக்கம் 4-2-70வரை | | 11-58 |
| இறுக்க வேண்டியது 4-2-70 வரை | 1411-15க்கு 5 வீத வட்டி | 1661-15 |

பணம் கொடுத்துமுடியும் வரை இறுக்க வேண்டியது.

"சந்நிதி வேல்"
பருத்தித்துறை,
15-11-69
கா. முத்துக்குமாருஐயர்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
எம். 379. 23-1-70

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் வலந்தலை வடக்கு. காரைநகரில் அடைவு பிடிக்கும் வே. சுப்பிரமணியம் அவர்களின் அடைவு கடையில் 1966-ம் ஆண்டு ஆனி மாதம் 22-ம் திகதி தொடக்கம் 1968-ம் ஆண்டு பங்குனி மாதம் 31-ம் திகதி வரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் என்னால் 1970-ஆம் ஆண்டு மாசி மாதம் 15-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் ஷ அடைவு கடையில் இருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வை. ஏரம்பமூர்த்தி
Auctioneer
ஏலவிற்பனையாளர்
காரைநகர்.
9-1-70 எம். 376 16, 23-1-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில்

மானிப்பாய் நவரெத்தினசிங்கம் முருகேசு —வழக்காளி
வழ இல: M. B 7697 எதிராக
வண்ணார்பண்ணை தென் கிழக்கு நாகமுத்து இராமலிங்கம் —எதிராளி
1. திருகோணமலை 1 சிங்லோறன்சிபிள்ளையும் மனைவி
2. லிசியும் —வெளிப்படுத்தப்பட்டவர்கள்

M. B. 7697ம் இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம் 1970-ம் ஆண்டு பெப்ரவரி (மாசி) மீ 27ம் உ (27-2-70) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 1820/- மேலும் 1000/- ரூபாவுக்கு 22-9-65 தொடக்கம் 22-6-66 வரைக்கும் வருடமொன்றுக்கு 12வீத வட்டியும், அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 227-87 சதமும் பவுண்டேச் மற்றும் விற்பனவுக்குரிய சலார்களும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டமும் பகுதியும். சுண்டிக்குளி கோவிற்பற்று கரையூரிறை 'ஆரியதுரையான் வளவும் ஆரியதுறையான் தறையும்' நிலப்பரப்பு 1, குளிகள் 1¼, வீடும் கிணறும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும், இதற்கு எல்லை கிழக்கு இராசேந்திரா மனைவி கனகத்தினுதனம், வடக்கு மைக்கேல் யோசேப்பினுதனம், மேற்கு - ரூட். தெற்கு -ஒழுங்கை பதிவு D 156/99

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏல விற்பனவாளர்.
கொமிஷனரும விலைமதிப்பாளரும்.
"இராசகிரி"
643, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.
எம் 383, 23—1—70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

அனலைதீவு, அருணாசலம் பொன்னம்பலம் —வழக்காளி
இல M B 10733 எதிராக
நடராஜஐயர் நாகேஸ்வரஐயர் தானாகவும் தனது காலஞ்சென்ற பெண் ஜகதாம்பாவின் ஆதனங்களின் தத்துவ பிரதிநிதியாகவும் - எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 10733-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970-ஆம் ஆண்டு பங்குனி மீ 10-ந்திகதி (10-3-70) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 4000/-யும் 19-9-67 தொடக்கம் முழுத்தொகை இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு 368-10 சதம் இதில ரூபா 1000/- கொடுபட்டுள்ளது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பிரிவு அனலைதீவு கோவிற்பற்று அனலைதீவிறை "சிம்மன் திடலும் பெரியபுலமும்" பர. நில. இலா, 7 - 0 கல்வீடு கிணறு செய்பயிர்வான்பயிர்களுடன் இதற்கெல்லை கிழக்கு: பிள்ளையார் கோவிலுக்குரியவாதனம், வடக்கு: சின்னையர் நடராஜா ஐயருக்குரியவாதனம், மேற்கு: வேலாயுதம் பெண் வள்ளியம்மைக்கும் சின்னத்தம்பி கந்தையாவுக்குமுரியவாதனங்கள், தெற்கு வேலாயுதம் பெண் வள்ளியம்மைக்கும் மற்றவர்களுக்குமுரியவாதனங்கள் மேற்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் மேற்சொல்லப்பட்ட காணிக்குரிய கிணற்றுப் பங்கும்

133 பருத்தித்துறை ரோட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்,
17—1—70
செ. விசாகரெத்தினம்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
எம். 382 23—1—70

## சிதம்பரம், ஸ்ரீநடராஜப்பெருமான் கோவில் கருங்கல்சுவர் சுற்றுமதில் திருப்பணி

சிதம்பரம் ஸ்ரீ நடராஜப்பெருமானின் திருக்கோயிலின் பாதுகாப்புக்காக, வீரப்பநாயக்க மன்னரால் கட்டப்பட்டுள்ள 6400 அடி சுற்றளவும், 36 அடி உயரமுள்ள கருங்கல் சுவர் பெரும்பகுதி நான்கு பக்கங்களிலும் சரிந்து பழுதடைந்து நல்ல பாதுகாப்பில்லாமலிருந்து வருகின்றதை திருப்பணிக் கமிட்டியார் அவதானித்து அதைப் புதுப்பிக்க ரூபாய் 15 இலட்சம் தேவை என்று மதிப்பீடு செய்துள்ளார்கள். 1960 ஆம் ஆண்டு மே மாதம் மதில் சுவர் திருப்பணியை ஆரம்பித்து வைத்து காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள், சைவமடாலய ஆதீனகர்த்தர்கள், ஆதீன திருக்கோயில்கள் சைவ பெருமக்கள் வழங்கியுள்ள 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் கீழ வாயில்—தெற்கு வாயில மணிமண்டப முகப்புகளில் 500 அடி நீள மதிற் சுவரை பூர்ணமாகப் புதுப்பித்து 50 அடிக்கு ஓர் நந்தியாகக் கருங் கல்லால் நந்திகள் செய்து புது மண்டப அமைப்பின் மீது வைத்துக்கொண்டே வருகினறார்கள்.

### முகப்புவாயில்களில் மணிமண்டபங்கள்

ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு தினமும் நடைபெற்று வருகின்ற 6 கால பூஜா காலங்களில் தெற்கு-மேற்கு வாயில் முகப்புகளிலுள்ள மணிமண்டபங்களில் மணியோசை ஒலித்துக்கொண்டு வருவதுபோல், கிழக்கு-வடக்கு வாயில் இரு முகப்புகளிலும் இரு மணி மண்டபம் அமைப்பதற்கும் திருப்பணிக் கமிட்டியார் திட்டமிட்டுள்ளார்கள். இது மணிமண்டபம் அமைத்துக் கொடுப்பதற்கு விருப்பமுடையோர்கள் திருப்பணிக் கமிட்டியார்களிடம் தொடர்பு கொள்ளலாம்.

### தெற்குவாயிலில், யாழ்ப்பாணம் அடியவரது மணி

தெற்கு வாயில் முகப்பு மணி மண்டபத்தில் தினமும் அடித்து வரும் 5 அடி உயரமுள்ள மணி சுமார் 90 ஆண்டுகளுக்கு முன் சிங்கப்பூரிலிருந்து யாழ்ப்பாணம் சைவப்பெரியார் ஒருவர் செய்து கொடுத்துள்ள மணி என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மலேஷியா பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. திருஞானசம்பந்தம் அவர்கள் அண்மையில் குடும்ப சகிதமாக தில்லையம்பதிக்கு வருகை புரிந்து வழிபாடுபாடுகள் செய்து கொண்டார். பொது தீக்ஷிதர்கள் சுற்று மதில் திருப்பணி நடந்துகொண்டு வரும் விபரங்களை திரு V. T. சம்பந்தமவர்களிடம் தெரிவித்தார்கள், அமைச்சரவர்கள் ஊர்சென்று சுற்றுமதில் திருப்பணிக்கு ரூபா 1001/- நன்கொடை அனுப்பி வைப்பதாயும் தெரிவித்துள்ளார்.

### சுற்றுமதில் திருப்பணி

இத் திருப்பணிக்கு பெரும் நிதியுதவி வேண்டும். நிதியுதவி அனுப்பி வைக்க விரும்புவோர் "தர்மபூஷணம்" திரு ப. இரத்தினசாமி செட்டியார், பொருள் காப்பாளர், ஸ்ரீ நடராஜர் கோயில் திருப்பணிக் கமிட்டி, சிதம்பரம், தென்னிந்தியா. என்ற முகவரிக்கு கடிதத் தொடர்புக் கொள்ளலாம் என்று திருப்பணிக் கமிட்டியார் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

x x x

### 12 ஆயிரம் ரூபா செலவில் அலங்காரத்திருவிளக்கு

தில்லையம்பதி ஸ்ரீமந், நடராஜப்பெருமான்சந்நிதியில் மதுரை மாநகரிலுள்ள மேலப்பேட்டை, கீழப்பேட்டை இந்து நாடார் சமூகத்தைச் சேர்ந்த விருதுநகர்- அருப்புக்கோட்டை-திருமங்கலம் உறவின்முறையார்கள் கடந்த 93 ஆண்டுகளாக (1876 ஜனவரி 30 ஆம் தேதி முதல்) பல முகங்களுடன் "சிங்காரச்செடி திரு

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

---

## அருணந்தி சிவாச்சாரியார்

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

கியார் மிகவுயர்ந்த நூலாக அறிஞர்களால் பாராட்டப் படுகின்றது. "தண்டமிழின் மேலாந்தரம்"

"இருபாவிரு பஃது"

பத்துவெண்பாவும், பத்து அகவலுமாக இரண்டுவகைப் பாவினாலமைந்துள்ளது ஆசிரியரை முன்னிலைப்படுத்தி மாணவன் வினவுவதாகவும், வினவிற்கு ஆசிரியர் விடையளிப்பதாகவும் அமைந்துள்ளது. ஆசிரியர் கூறுநுக்களாகவுள்ளனவே சித்தாந்த உண்மைகள்.

இவரியற்றிய நூல்களிலிருந்து நாம் அறிந்துகொள்ளவேண்டிய சித்தாந்த உண்மைகள்

1. இறைவன் உண்டு ஒருவன், ஒருத்தி, ஒன்று-என்று உலகம் முத்திறப்பட்டு தோன்றி, நின்று அழிவதால், அதை இயற்றியவன் ஒருவன் உண்டு அவனே இறைவன்.

2. உயிர் (ஆன்மா) உண்டு உயிர்பல, உயிர் என்பது உடலின் வேறாக அறிவு, விழைவு செயல் என்னும் மூன்றையும் உடையது. உயிர் ஒன்று என மறைகள் கூற, உயிர் பல எனக்கொள்வது எவ்வாறு பொருந்துமெனில், மறைகள் உயிர்த்தலைவன் ஒருவனே என்பதை வற்புறுத்த உயிர ஒன்றி நின்றனன் எனக் கூறுகின்றன. எழுத்துக்கள் தோறும் அகரம் போல உயிர்களோடு சிவனும் சேர்ந்து நிற்கிறான்,

3. கட்டு (தளை)

(a) இருவினை (நல்வினை-தீவினை) உயிர்கள் நுகரும் இன்ப துன்பங்களுக்கு காரணம் இருவினை. இருவினையால் உயிர்கள் பிறந்து, இவ்வுலகத்திற்கு வருவதும இங்கிருந்து போவதுமாகும்.

(b) மாயை, உலகத்திற்கு முதற் காரணமாக அணுக்களைக் கொள்ள முடியாது; அவைகள் சமயப் பகுப்புடையவையாதலால் பகுப்பின்றியுள்ள மாயையே முதற் காரணம்

(c) ஆணவம்: ஒன்றாயிருந்தும், அனேக சக்திகளையுடையதாய் தொடக்கம அற்றதாய் உயிரின் அறிவோடு தொழிலை ஆர்த்து செம்பிற் களிம்பு போன்று, உயிரோடியைந்து நின்று அறியாமையைக் காட்டுவது. இவை மூன்றும் உயிர்க்குத் தளை, நெல்லுக்கு முளை, தவிடு உமி போல இவை மூன்றும் உயிரின் உண்மை வடிவை மறைக்கின்றன.

(d) மானுடப் பிறவியின் நோக்கமும் அருமையும்.

இறைவன் பணிக்காக, மானுடப் பிறவி எய்துகிறது. உருவம் அழியுந்தன்மையுடையதாதலின், பிறவியின் நோக்கத்தை மறவாது உருவம் உள்ளபோதே இறை பணி நின்று, உய்தற்கான வழிதேடவேண்டும்.

(e) இறைவன் உயிர்களை ஒறுத்தற்குக் காரணம்.

தாய், தந்தையர் தம் புதல்வர்களை நன்னெறியிற் செல்லுவதற்காகச் சிற்சில வேளை களில் அவர்களை ஒறுத்தல் போலவும் இறைவன் உயிர்களுக்கு வினைப்பலன்களை ஊட்டி வினையறுப்பன்.

(f) உயிர்களுக்கு அன்பு செய்தல்.

உயிர்களுக்கு அன்பு செய் செயயும் முயற்சிக்கு அடிப்படை இறைவனிடத்தன்பு. இறைவனிடத்தன்பில்லார் அடியவர்களுக்கன்பில்லார். எவ்வுயிர்க்கும் அன்பிலார்; தமக்கும் அன்பில்லார் அன்பற்ற அவர்கள் பிணத்தை ஒப்பர்: அவர்களோடு இணங்குவதும் தவறு.

---

### இன்று பெரியபுராண விரிவுரை

சிவதொண்டன் நிலையத்தாரின் ஆதரவில் வண்ணை வைத்தீசுவரன் கோயிலில் வெள்ளிதோறும் "சிவதொண்டன்" ஆசிரியரால் மாலை 6 மணி — 7 மணி வரை பெரியபுராண விரிவுரை நடாத்தப்பெற்று வருகிறது. (நகி)

### ஒரு விண்ணப்பம்

"இந்துசாதனம்" தமிழ் ஆங்கிலப்பத்திரிகைகளின் சந்தாதாரர்களைத் தங்கள் சந்தாப்பணத்தை நிலுவையின்றி செலுத்தும் வண்ணம் விநயத்துடன் கேட்டுக்கொள்ளுகிறோம். அதிபர்,

---

### கோட்டு ஏறுபணவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழ. இல: M. B. 9062

கந்தையா சின்னத்தம்பி, உடுவில் —வழக்காளி

எதிராக

1. சாமுவேல் வேதநாயகம் போலும் பெண்
2. செல்லமணியும் இருவரும், மாகியப்பிட்டி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9062-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1970-ம் ஆல் மாசி மீ 12 (12-2-70) வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 5937/- 5-5-1967 தொடக்கம் 21-5-1968 வரைக்கும் ரூபாய் 3000/-க்கு 9% வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 6% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 420-35

#### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி பண்டைத்தெருப்புக் கோவிற்பற்று மாகியப்பிட்டி இறை "ஆயிலாவளை" (நி. மா 4) நிலப்பரப்பு நாலும் கல் வீடும், குசினியும், கிணறும் தென்னைகளும், செய் யிர் வாழைப்பயிர்களும், எல்லை கிழக்கு நைவொழுங்கையும், கதிரன் சீனியினதும், பங்காளரினதும் ஆதனம், வடக்கு: கதிரன் வேலன் பெண் சின்னக்குட்டியினதும், வள்ளிப்பிள்ளையினதும் ஆதனம், மேற்கு: ஒழுங்கை தெற்கு: கதிரன் பொன்னையினதும் வெள்ளையன் ஐயனும் பங்காளரினதும் ஆதனம்

1970ம் ஆல் தைமீ 12ம்திகதி கலைமணி,

பொ. செல்வக்குமாரசுவாமி
கொமிஷனர்.
அராலி வடக்கு.

M 381 23-1-70

---


## THAMBY & Co.

ACCEPT

**I. Fixed Deposits**

at the following Rates of Interest

| | | |
|---|---|---|
| 1 Year | 10 % | per annum |
| 2 Years | 11 % | ,, ,, |
| 3 Years | 12 % | ,, ,, |

FOR CHARITABLE INSTITUTIONS 12 % per annum

INTEREST IS PAYABLE ANNUALLY

N. B. These Deposits could be Withdrawn At Any Time by Giving the Firm 30 DAYS WRITTEN NOTICE

**II. Call Deposits**

THESE DEPOSITS COULD BE WITHDRAWN by giving the FIRM

30 Days Notice — Interest @ 8 % per annum
or 7 ,, ,, — ,, 7 % , ,,

**III. Savings Deposits**

at the following RATES OF INTEREST

8 % per annum on MONTHLY MINIMUM BALANCES

10 % { FOR CHARITABLE INSTITUTIONS

Head Office: THIRUNELVELY, JAFFNA
Branch ,, : VANNARPONNAI, JAFFNA


### கோட்டு விற்பனவு விளம்பரம்

கந்தையா வேலுப்பிள்ளை மனைவி பெண் முத்தம்மா வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம் —வழக்காளி

இல M B 5818 எதிராக

சின்னப்பொடி சுந்தரம், வண்ணார்பண்ணை வடமேற்கு, யாழ்ப்பாணம் அவரின் இறந்த மனைவி இராசத்தின் சொத்துக்களின் சட்டபூர்வமான பிரதிநிதி —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின், M B 5818-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970 - ஆம் ஆல் மாசி மாதம் 25 ம் திகதி (25-2-70) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 2686-00ம் 12-12-1964 தொடக்கம் 2-11-65 வரைக்கும் ரூபா 1500/-க்கு 12% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபா 125-00 இதில் ரூபா 1000-00 கழித்து அறவிடப்படும்

#### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணம் பகுதி நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் மேற்கிலுள்ள "பிறப்பங்குளி" நிலப்பரப்பு 2 குழி 2½. வீடும், குசினியும்: கடையும் கிணறும் பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு: சின்னத்தம்பி நடேசு மனைவி பெண் முத்துப்பிள்ளைக்குரிய ஆதனம், வடக்கு: கையொழுங்கை, மேற்கு ரோடு, தெற்கு முத்து கந்தையா விற்றும் மனைவி தெய்வானைக்குமுரிய ஆதனம், இதடங்கலும் இதை சேர்ந்தவைகளும். பதிவு இலக்கம்: D. 259/156

கா. தர்மலிங்கம்

உரும்பராய், 20-12-69, கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்,

எம். 385 23-1-70

---


யாழ்ப்பாணம்

## — ஐக்கிய இலாபநிதி —

கொம்பனி லிட், (ஸ்தாபிதம் 1918)

10,000-00 பங்குகள் ரூபா 5 விகிதமான 50,000-00

மாதாந்த சேமம் கட்டும் முறை.

மாசமொன்றுக்கு ரூபா 10-00 விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் கட்டுப் பணமும் வட்டியுமாக ரூபா 1000-00 திருப்பிக் கொடுக்கப்படும். ரூபா 100-00 விகிதமாகக் கட்டினால் ரூபா 10,000-00 கொடுக்கப்படும்.

சேமிப்பு பற்றுவரவு எச்சநிதி.

ரூபா 1500-00 க்கு குறையாமல் இருக்குமாயின் 1 வீத வட்டியுடன் சேமிப்புப் பற்று வரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட சேமம.

சேமப்பணம் முறையே, 12, 24, 36, என்னும் மாச காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டி முறையே 7, 8, 9, வீதமாகக் கொடுக்கப்படும்,

கடன்.

நகைகள் ஈடு வைத்துக் கொண்டும், சேமப்பணத்தைப் பிணையாக வைத்துக் கொண்டும் கடன் கொடுக்கப்படும் முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்,

இன்னும் வேண்டிய விபரங்களை எங்கள் காரியாலய மூலமாக அறிந்துகொள்ளலாம். — மனேஜர்


ஆறிருதடந்தோள்வாழ்க வறுமுகமவாழ்க வெற்பைக்
கூறுசெய்தனிவேல்வாழ்க குக்குடம்வாழ்க செவ்வேள்
ஏறியமஞ்ஞைவாழ்க யானைதன்னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீரடிய ரெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 23—1—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்